

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.7.2024) சென்னை மாநகராட்சி 122ஆவது வார்டில் உள்ள தேனாம்பேட்டை பகுதியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்திற்கு நேரில் சென்று, ஆய்வு மேற்கொண்டபோது, அங்கு தயாரிக்கப்பட்ட உணவின் தரத்தினை சுவைத்து பார்த்து ஆய்வு செய்தார். உடன் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன் உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.7.2024) சென்னை மாநகராட்சி 122ஆவது வார்டில் உள்ள தேனாம்பேட்டை பகுதியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்திற்கு நேரில் சென்று, ஆய்வு மேற்கொண்டபோது, அங்கு உணவருந்த வந்த நபர்களிடம் உணவின் சுவை மற்றும் தரம் குறித்து கேட்டறிந்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.7.2024) சென்னை மாநகராட்சி 122ஆவது வார்டில் உள்ள தேனாம்பேட்டை பகுதியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்திற்கு நேரில் சென்று, ஆய்வு மேற்கொண்டார். உடன் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன் உள்ளார்.

### மூன்று குற்றவியல் சட்டங்களை எதிர்த்து தி.மு.க. சார்பில் – அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி வழக்கு!

# ஒன்றிய அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் நோட்டீஸ்!

## மக்களை குழப்பும் வகையில் சட்டங்கள் உள்ளதாக நீதிபதிகள் கருத்து!

சென்னை, ஜூலை 21-

புதிய குற்றவியல் சட்டங்களுக்கு எதிராக தி.மு.க. சார்பில் – கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி தொடர்ந்த வழக்கில் பதிலளிக்க ஒன்றிய அரசுக்கு உயர்நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இந்திய தண்டனைச் சட்டம், இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டம் மற்றும் இந்திய சாட்சிகள் சட்டம் ஆகிய சட்டங்கள் நடைமுறையில் இருந்து வந்த நிலையில், ஒன்றிய அரசால் அவை இந்தியில் பெயர் மாற்றப்பட்டு, நடைமுறைக்கு வந்துள்ளன. புதிய 3 குற்றவியல் சட்டங்களை எதிர்த்து தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார்.

நாடாளுமன்றத்தில், முறையான விவாதங்கள் ஏதுமின்றியும், மாநிலங்களின் கருத்துகளைக் கேட்காமலும் இந்த சட்டங்கள் அவசர கதியில் அமல்படுத்தப்பட்டுள்ளதால், இவை சட்ட விரோதமானது, தன்னிச்சையானது என்று அறிவிக்குமாறு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வழக்கை விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதிகள் எஸ்.எஸ்.சுந்தர், செந்தில்குமார் ஆகியோர் அமர்வு, ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள சட்டங்கள் மக்களை குழப்பத்தில் ஆழ்த்தும் வகையில் உள்ளதாக தெரிவித்தனர். சட்டங்களை கொண்டு வரும் முன் சட்ட ஆணையத்தை ஆலோசித்து இருக்க வேண்டும் என்றும் கூறினர்.

இதைத்தொடர்ந்து, புதிய குற்றவியல் சட்டங்கள் தொடர்பாக 4 வாரத்தில் ஒன்றிய அரசு பதில் அளிக்க வேண்டும் என உயர்நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

# கனிம திருட்டுகளை தடுக்க வேண்டும்!

## அதிகாரிகளுக்கு அமைச்சர் துரைமுருகன் உத்தரவு



சென்னை, ஜூலை 21-

கனிமங்கள் கள்ளத்தனமாக எடுத்துச் செல்லப்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமைச்சர் துரைமுருகன் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். சென்னை தலைமைச் செயலகத்தில் புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் செயல்பாடுகள் மற்றும் அதன் முன்னேற்றம் குறித்து நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் நேற்று முன்தினம் ஆய்வுக் கூட்டம் நடந்தது. அப்போது, அமைச்சர் துரைமுருகன் கூறியதாவது:

கடந்த ஆண்டுகளை காட்டிலும் இந்த ஆண்டு கனிமவளத்துறையின் வருவாயை அதிகரிக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பட்டியலிடப்பட்டது. சுரங்கங்கள் மற்றும் குவாரிகள் வைத்துள்ள நிலுவை தொகையை வசூல் செய்ய தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். சுரங்கங்கள் மற்றும் குவாரிகளில் விதி மீறல்களை ஆய்வு செய்து அபராதம் விதிப்பது, அண்டை மாநிலங்களுக்கு விதிகளுக்கு புறம்பாக கனிம வளங்களை எடுத்து செல்லும் வாகனங்களை கைப்பற்றி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் பதிவு செய்யப்படாமல் இயங்கும் செங்கல் சூளை, எம். சாண்ட் மற்றும் கிரஷர் அலகுகளை பதிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். பறக்கும் படைகள் மண்டலங்களில் திடீர் தணிக்கை மேற்கொண்டு கனிமங்கள் கள்ளத்தனமாக எடுத்துச் செல்லப்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். கூட்டத்தில் துறை செயலாளர் பணீந்திர ரெட்டி, கனிம வளத்துறை ஆணையர் சரவணவேல்ராஜ் மற்றும் கனிம வளத் துறை இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள் மற்றும் உதவி இயக்குநர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



வனத்துறை அமைச்சர் மரு. மா. மதிவேந்தன், சென்னை வனக் கோட்டம், பள்ளிக்கரணை வனச்சரக பொறுப்பில் உள்ள கொட்டிவாக்கம் கிராமபுல எண்.479/2 மற்றும் 5ல் கண்டசுமார் 2.50 ஏக்கர் நிலத்தில் வனத்துறை பணியாளர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்பு கட்டிக் கொடுப்பது தொடர்பாக இடத்தினை ஆய்வுசெய்தார். சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் முதன்மை செயலாளர் முனைவர்.செந்தில்குமார், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், முனைவர். சுதான்ஷு குப்தா, சென்னை மண்டல தலைமை வனப்பாதுகாவலர், திருமதி. கௌ.கீதாஞ்சலி, சென்னை கோட்டமாவட்ட வன அலுவலர், வி.ஏ.சரவணன், சென்னை மாவட்ட வருவாய் அலுவலர், செல்வி. அனுசியா,வனத்துறை மற்றும் வருவாய்த் துறை பணியாளர்கள் ஆகியோர் ஆய்வின் போது உடன் இருந்தனர்.

### ஆ.ராசா எம்.பி தலைமை! புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்

# மாஞ்சான் விடுதி வே.சுரேஷ்கண்ணன் இல்ல விழா!

## எஸ்.ரகுபதி சிவ.வீ.மெய்யநாதன் – கே.கே.செல்ல பாண்டியன் – ஆ.கிருஷ்ணசாமி வாழ்த்துரை!

புதுக்கோட்டை ஜுலை 21- புதுக்கோட்டை தெற்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளரும், மாஞ்சான்விடுதி ஊராட்சி மன்ற தலைவருமான வே.சுரேஷ்கண்ணன், சு.ஜீவிதா ஆகியோரது குழந்தைகள் சு.ஜெய்ஷனா ஸ்ரீ சு.சுமித்ரன் ஆகியோரது காதணி விழா இன்று (21.07.2024 - ஞாயிற்றுக் கிழமை) காலை 10 மணியளவில் வம்பன் 4ரோடு மகா லெட்சுமி கோகிலாம்பாள் மனமகிழ் மன்றத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர், மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா தலைமையில் நடைபெறுகிறது. திருவரங்குளம் மேற்கு ஒன்றிய செயலாளர் கே.பி. கே.டி.தங்கமணி வரவேற்புரையாற்றுகிறார். சட்டத் துறை அமைச்சர், தெற்கு மாவட்டக் கழக செயலாளர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்ல பாண்டியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இந்நிகழ்வுகளில் கழக ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, பெரியண்ணன் அரசு, கழக இலக்கிய அணி துணைத்தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், கம்பன் கழக தலைவர் தொழிலதிபர் முத்துப்பட்டினம் எஸ்.ராமச்சந்திரன், டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, எம்.எம். அப்துல்லா எம்.பி, எம். சின்னதுரை எம்.எல்.ஏ, கழக .விவசாய தொழிலாளர் அணி துணைத்தலைவர் த.சந்திரசேகரன், தொழிலதிபர் கரு. ரெத்தினம், தொழிலதிபர் ப.கரிகாலன், கார்த்தி ப. சிதம்பரம் எம்.பி, , பி.டி. அரசக் குமார், புதுக்கோட்டை விஜயா, கீரை. தமிழ்ராஜா, ஜெயலெட்சுமி தமிழ்ச்செல்வன், பரணி இ.ஏ.கார்த்திகேயன், ஞான இளங்கோவன்,

ஸ்ரீதேவி அண்ணாத்துரை, எம்.ராஜேந்திரன், வள்ளியம்மை தங்கமணி, மேயர் திலகவதி செந்தில், என்.பாலசுப்பிரமணியன், ராசி முருகானந்தம், கே. எஸ்.ரவி, மகேஸ்வரி சண்முகநாதன், கே.சி.சிவக்குமார், அரு.வடிவேல், ரெ.தங்கம், ஆ பழனிக்குமார், மா.நடேசன் மேகலா முத்து,

எம்.எம்.பாலு, உஷா செல்வம், இராசு. சந்தோஷ், இரா.கணேசன் சி.மகிலன், வி.முருகானந்தம், தீபா ஆறுமுகம், எஸ். கவிவர்மன், தொழிலதிபர் தெ.வீரப்பன், ஏ.ஸ்ரீதர் எஸ். எம்.சி. இளைய சூரியன்,

கே.வி.என்.சுரேஷ், அன்பு மணவாளன், தொழிலதிபர் வி.பழனிவேல், எல். வடிவேல், ரா.ராஜாங்கம், கே.வி.எஸ்.பழனிவேல், கே. ஆர்.செல்வி ராம்தாஸ், கவிஞர் ஆ.மரிய எட்வின் மற்றும் மாநில,மாவட்ட, ஒன்றிய, நகர, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டு குழந்தைகளை வாழ்த்துகின்றனர்.

முடிவில் மாஞ்சான் விடுதி ஊராட்சி மன்ற தலைவர் சுரேஷ் கண்ணன் நன்றி கூறுகிறார்.



கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி பெண்ணாடம் நகராட்சி மீனவர் தெரு மற்றும் சோழன் நகர் ஆகிய இரண்டு இடங்களில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி கட்டிடங்களை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் கடலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.விஷ்ணு பிரசாத் ஆகியோர் திறந்து வைத்தனர். உடன் நகர மன்றத் துணைத் தலைவர் எம். குமரவேல் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.




தருமபுரி மேற்கு மாவட்டம் அரூர் பேரூராட்சிக்கு உட்பட்ட நகர பேருந்து நிலையம்,கச்சேரி மேடு,உள்ளிட்ட பகுதிகளில் அரூர் பேரூர் கழக செயலாளர் முல்லை ரவி ஏற்பாட்டில் நடைபெற்ற நன்றி அறிவிப்பு கூட்டத்தில் தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் தலைமையில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி ஒன்றிய அரசின் திட்டங்களை அரூர் பகுதிக்கு அதிகளவு கொண்டு வருவேன் என்று பேசினார்.உடன் மாவட்ட துணை செயலாளர் கிருஷ்ணகுமார், நகர துணை செயலாளர் விண்ணரசன்,ஒன்றிய செயலாளர்கள் சந்திரமோகன், சௌந்திரராசு மற்றும் கழகத்தினர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புழல் து. திருநாவுக்கரசு
### ஜூலை 21 (2019)



இளமைக் காலம் முதலே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

புழல் பேரூர்க் கழகத்தில் 13வது வார்டு செயலாளராகவும், பேரூர் மாணவர் அணி அமைப்பாளராகவும், பின்னர் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராகவும், அதன்பின் புழல் பேரூர்க் கழகச் செயலாளராக நான்கு முறையும், சென்னை வடக்கு மாவட்டம் 23வது வட்டச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகச் சொற்பொழிவாளராகப் பணியாற்றி தமிழகம் முழுவதும் கழகக் கொள்கைகளைப் பரப்பியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**